

கழகப் பொருளாளரும், ஒன்றிய முன்னாள் அமைச்சருமான டி.ஆர்.பாலு எம்.பி. அவர்களின் துணைவியாரும் கழக தொழில்நுட்ப அணிச் செயலாளரும், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சருமான டி.ஆர்.பி.ராஜாவின் தாயாருமான திருமதி ரேணுகா தேவி அவர்கள் மறைவையொட்டி சென்னை தியாகராயர் நகரில் உள்ள அன்னாரின் இல்லத்தில் மு.க.தமிழரசு, அவரது துணைவியார் திருமதி மோகனா தமிழரசு மற்றும் கழக மாநில இலக்கிய அணித் தலைவர் அன்வர் ராஜா ஆகியோர் அம்மையாரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

### பீகாரில் வாக்காளர் பட்டியல் மோசடி குறித்து மக்களிடையே விழிப்புணர்வு!

# வாக்காளர் அதிகார யாத்திரையில் இருசக்கர வாகனப் பேரணி!

### ராகுல் காந்தி – தேஜஸ்வி யாதவ் பைக்கில் சென்றனர்!

பாட்னா, ஆக. 25-

பீகாரில் வாக்காளர் அதிகார யாத்திரையின் ஒரு பகுதியாக, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி, ராஷ்டிரிய ஜனதா தள கட்சித் தலைவர் தேஜஸ்வி யாதவ் ஆகியோர், பல்லாயிரக்கணக்கானோருடன் இருசக்கர வாகன பேரணியில் ஈடுபட்டனர்.

வாக்காளர் பட்டியலில் மோசடி, கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வாக்குகள் திருடப்பட்டன ஆகிய குற்றச்சாட்டுகளை முன்வைத்து, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, பீகாரில் 16 நாட்கள் நடைபயணம் மேற்கொண்டு வருகிறார்.

இந்த நடைபயணத்திற்கு, 'வாக்காளர் அதிகார யாத்திரை' என பெயரிடப்பட்டுள்ளது. இந்த யாத்திரையின் ஒரு பகுதியாக, பீகாரின் பூர்ணியா மாவட்டத்தில், பல்லாயிரக்கணக்கான மக்களின் ஆதரவுடன், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி, ராஷ்டிரிய ஜனதா தள கட்சியின் தலைவரும், பீகார் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான தேஜஸ்வி யாதவ் ஆகியோர், இருசக்கர வாகன பேரணியில் ஈடுபட்டனர்.



தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், பிள்ளையார்நத்தம் ஊராட்சியில் தமிழ்நாடு அரசு வேளாண்மை மற்றும் உழவர்நலத்துறை சார்பில் JSW நிறுவனம் இணைந்து பண்ணைக்குட்டை அமைக்கும் பணியினை கழக துணைப் பொதுச் செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் துவக்கி வைத்தார். நிகழ்விற்கு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை அமைச்சர் தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர் திருமதி.கீதாஜீவன் முன்னிலை வதித்தார். விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜி.வி. மார்கண்டேயன், உடன் மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், தூத்துக்குடி மாநகர மேயர் ஜெகன் பெரியசாமி, வேளாண்மை இணை இயக்குனர் பெரியசாமி, ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பு, சின்னமாரிமுத்து, அன்புராஜன், இம்மானுவேல், புதூர் ராதாகிருஷ்ணன், செல்வராஜ், மும்மூர்த்தி, காசி விஸ்வநாதன், நவநீதக்கண்ணன், துறை சார்ந்த அதிகாரிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### கல்வியிலும் உயரும் திராவிட மாடல் அரசு!

# திருவாரூர் - குடவாசலில் புதிய கல்லூரிக் கட்டிடம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று காணொலி வாயிலாக திறந்து வைக்கிறார்!



**திருவாரூர், ஆக. 25 -**

**திருவாரூர் - குடவாசலில் அமைந்துள்ள அரசுக்கல்லூரிக்கு, தமிழ்நாட்டின் முதல்வர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, ரூ.15 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய கட்டிடத்தை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று காணொளி வாயிலாக திறந்து வைக்கிறார்.**

திருவாரூர் மாவட்டம் குடவாசலில் கடந்த 2017-ஆம் ஆண்டு அப்போதைய அ.தி.மு.க. ஆட்சியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்கப்பட்டது.

தொடர்ந்து எட்டு ஆண்டு களாக இந்த கல்லூரி குடவாசல் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தான் கல்லூரி இயங்கி வந்தது.

எம்.ஜி.ஆர். பெயரில் கல்லூரியை தொடங்கிய அ.தி.மு.க. அரசு, கல்லூரிக்கு தேவையான கட்டிடங்களை கட்டுவதற்கு எந்த வித முனைப்பும் காட்டாமல் இருந்தது. இது குறித்து கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பலமுறை போராட்டம் நடத்தியும் அப்போதைய அ.தி.மு.க. அரசு கல்லூரி கட்டுவதற்கு எந்தவித முயற்சி எடுக்காமல் இருந்தது. இதனால் ஒரே இடத்தில் பள்ளி மாணவர்களும் கல்லூரி மாணவர்களும் பயிலக்கூடிய அவலம் நிகழ்ந்து இருந்தது.

இந்த நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு தொடக்க .கல்வி உயர் கல்வி இவைகளில் இந்திய அளவில் தமிழ் நாட்டை முதலிடத்திற்கு கொண்டு செல்லும் திராவிட நாயகர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆட்சி மக்களின் பேராதரவோடு அமைந்தது.

திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன் தொடர் முயற்சியால் தமிழ்நாடு முதல்வரின் வழிகாட்டுதல்களின் படி இக்கல்லூரிக்கு புதிதாக கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. புதிதாக கல்லூரி கட்டிடம் கட்டுவதற்காக தி.மு.க. மாவட்டச் செயலாளரும் திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கலைவாணன் ரூ.25 லட்சம் மதிப்பிலான தனக்கு சொந்தமான இடத்தை கல்லூரி கட்டிடம் கட்டுவதற்கு அரசுக்கு தானமாக பத்திரப்பதிவு செய்து கொடுத்திருந்தார்.

இதையடுத்து அந்த இடத்தில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் கடந்த ஆண்டு கட்டிடம் கட்டும் பணி தொடங்கியது. இந்த கட்டிடத்தில் 14 வகுப்பறைகளும், 3 ஆய்வகமும், ஒரு நூலகம், 6 இதர அறைகளும், கருத்தரங்க அறை ஒன்று ஆகியவைகளுடன் 43,324 சதுர அடி பரப்பளவில் இரண்டு தளத்துடன் கூடிய கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் விளையாட்டு மைதானம் உள்ளிட்ட கல்லூரிக்கு தேவையான அனைத்து கட்டமைப்பு வசதி களும் இந்த கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ளது.

இன்று (25.08.2025), தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி வாயிலாக இந்த கல்லூரி கட்டிடத்தினை திறந்து வைக்கிறார்.

நிகழ்வில் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன் உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்களும், கல்வியாளர்களும், பொதுமக்கள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

### கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட
### முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு
# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



கீ.வ.குப்பம் மத்திய ஒன்றியம்,
வேலூர் மாவட்டம்.



போளூர் நகரம்,
திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்.



காடையாம்பட்டி பேரூர்,
சேலம் மத்திய மாவட்டம்.



அரூர் பேரூர்,
தருமபுரி மேற்கு மாவட்டம்.



அருப்புக்கோட்டை நகரம்,
விருதுநகர் தெற்கு மாவட்டம்.



மானாமதுரை கிழக்கு ஒன்றியம்,
சிவகங்கை மாவட்டம்.



தொட்டியம் மேற்கு ஒன்றியம்,
திருச்சி வடக்கு மாவட்டம்.



ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றியம்,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



மணிமுத்தாறு பேரூர்,
திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்.